ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2118/42 - 2019 අප්‍රේල් මස 09 වැනි අඟහරුවාදා - 2019.04.09

*2118/42 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 09 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### தென் மாகாண மாகாண சபை

### தென் மாகாண மாகாண சபையின் 2019 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க கூட்டுறவு ஊழியர்களின் ஒய்வூதிய பிரமாணம்

தென் மாகாண மாகாண சபை மூலம் 2019 பங்குனி மாதம் 26 ஆந் திகதி அனுமதிக்கப்பட்ட தென் மாகாண கௌரவ ஆளுநர் மூலம் 2019, சித்திரை மாதம் 01 ஆந் திகதி அனுமதிக்கப்பட்ட தென் மாகாண மாகாண சபையின் 2019 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க கூட்டுறவு ஊழியர்களின் ஓய்வூதிய பிரமாணம், ஆளுநரின் அனுமதியைப் பெற்ற 2019, சித்திரை மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறையாகும் என தென் மாகாண சபையின் விவசாய, கமத்தொழில் அபிவிருத்தி, நீர்ப்பாசன, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு, உணவு வழங்கல் மற்றும் விநியோக, வியாபார மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பான அமைச்சர் உடலமத்த கமகே தயாவங்ச ஆரியதிலக ஆகிய நான், இதன் மூலம் அறியத் தருகிறேன்.

உடலமத்த கமகே தயாவங்ச ஆரியதிலக,
தென் மாகாண சபையின் விவசாய, கமத்தொழில் அபிவிருத்தி,
நீர்ப்பாசன, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு,
உணவு வழங்கல் மற்றும் விநியோக,
வியாபார மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி
தொடர்பான அமைச்சர்.

தென் மாகாண சபையின் விவசாய அமைச்சு அலுவலகம்,
4 ஆம் மாடி, தக்சிணபாய, லபுதுவ, காலி.
2019, சித்திரை 01.



*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**தென் மாகாண மாகாண சபையின் 2019 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க கூட்டுறவு ஊழியர்களின் ஒய்வூதிய பிரமாணம்**

தென் மாகாண கூட்டுறவு பணியாளர்கள் தொடர்பாக ஓய்வூதிய சம்பளத்திட்டமொன்றை தாபித்தல் பொருட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளல் தொடர்பாகவும், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் பதிவாளரால் அத் திட்டம் தென் மாகாணத்தில் நடாத்துவித்தல் பொருட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளல் தொடர்பாகவும், அத்துடன் இணைவான அல்லது தொடர்புள்ள காரணங்கள் தொடர்பாக ஏற்பாடுகள் மேற்கொள்ளல் பொருட்டான நியதிச் சட்டமாகும்.

தென் மாகாண மாகாண சபையினால் இவ்வாறாக விதிக்கப்படுகிறது.

குறும் பெயர் மற்றும் இயங்கும் திகதி

1. 2019 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தென் மாகாண மாகாண சபையின் கூட்டுறவு சேவையாளர் ஓய்வூதியச் சம்பள நியதிச் சட்டம் என அறிமுகப்படுத்தும் இவை தென் மாகாணத்தின் ஆளுநரால் அனுமதித்திடப்படும் திகதி முதல் இயங்கும்.

**1 ஆம் பிரிவு**

**கூட்டுறவு பணியாளர் ஓய்வூதிய சம்பளத் திட்டம் தாபித்தல்.**

கூட்டுறவு பணியாளர் ஓய்வூதிய சம்பளத் திட்டத்தினை ஸ்தாபித்தல்.

2. (i) இந் நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இசைவாக செயற்படுதல் பொருட்டு கூட்டுறவு ஓய்வூதிய சம்பளத் திட்டம் என அழைக்கப்படும் திட்ட முறைமையினை தாபித்தல் வேண்டும்.

நியதிச் சட்ட கூட்டுறவாக இருத்தல் வேண்டும் என்பது.

(ii) இவ் ஓய்வூதிய சம்பளத் திட்டம் தொடர்ந்து நிலவும் பரம்பறையொன்று மற்றும் பொது முத்திரையொன்று இருக்கும் சட்டபூர்வ கூட்டுத்தாபனமாக இருத்தல் வேண்டியதோடு அதில் சட்டபூர்வ கூட்டுத்தாபனமய நிலையால் வழக்குகள் அல்லது சட்டபூர்வ வேலைகள் மற்றும் வழக்குகள் மற்றும் ஏனைய சட்டபூர்வ வேலைகள் தொடர்பாக சுற்றவாளி என்பதற்கு காரணங்கள் கூறுவதற்கும் இந் நியதிச் சட்டத்தின் வேலைகள் தொடர்பாக தேவையான அனைத்தையும் செய்வதற்குமான அதிகாரம் இருக்கும் ஒரு சட்டபூர்வ கூட்டுத்தாபனமாக அமைகின்றது.

பணிப்பாளர் நியமித்தல்.

3. (i) கூட்டுறவு சேவையாளர் ஓய்வூதியச் சம்பளத் திட்டம் பரிபாலிக்கும் பணி தொடர்பாக தற்காலத்தில் தென் மாகாணத்தில் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பதவிதாங்கும் நபர் இத் திட்டத்தின் பணிப்பாளராவார்.

பணிப்பாளரின் பங்குகோடல்

(ii) பணிப்பாளர் திட்டத்தின் அலுவல்கள் மற்றும் அலுவல்கள் மேற்பார்வையிடல், பரிபாலித்தல் மற்றும் நிருவகித்தல் தொடர்பாக வகைகூறல் வேண்டும்.

ஆலோசனை நிருவாக சபை

(iii) திட்டம் தொடர்பான அனைத்து அலுவல்கள் பரிபாலித்தல் மற்றும் நிருவகித்தல் தொடர்பாக பணிப்பாளரிடம் ஆலோசனை வழங்கல் மற்றும் விதப்புரைகள் பெற்றுக் கொடுக்கும் அலுவல்கள் தொடர்பாக மேலே குறித்துரைக்கப்பட்டுள்ள விதமாக ஏழு பேரைக்கொண்ட ஆலோசனை நிருவாக சபை யொன்று இருத்தல் வேண்டும். அவ் அங்கத்தவர்களிடம் இருந்து 3(iv) ஆம் கூற்றில் (ஊ) மற்றும் (ஒ) எனும் கூற்றுகளின் கீழ் குறிப்பிடப்படும் அங்கத்தவர்கள் அமைச்சராலும் தீ எனும் கூற்றில் குறிப்பிடப்படும் அங்கத்தவர் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராலும் நியமித்திடப்படுதல் வேண்டும்.

ஆலோசனை நிருவாக சபையின் அமைப்பு

(iv) ஆலோசனை நிருவாக சபை அங்கத்தவர்கள் என்ற வகையில்,

(அ) தென் மாகாண கூட்டுறவு விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளர்,

(ஆ) தென் மாகாண பிரதித் தலைமை செயலாளர் (நிதி)

(இ) தொழிலாளர் ஆணையாளர் நாயகம் அல்லது அவரால் பெயரிடப்படும், அத் திணைக்களத்தின் நிறைவேற்று உத்தியோகத்தரொருவர்;

(ஈ) தென் மாகாண கூட்டுறவு சேவையாளர் ஆணைச் சபைச் செயலாளர்;

(உ) தென் மாகாணத்தின் காலி/மாத்தறை/அம்பாந்தோட்டை கூட்டுறவு கிராமிய வங்கிச் சங்கங்கள் பிரதிநிதித்துவப்படுத்தி ஒரு பணிப்பாளர் அல்லது முகாமையாளர்;

(ஊ) 05 வருடங்களுக்குக் குறையாத சேவை தேர்ச்சியுடன் கூடிய, சட்டபூர்வமான ஒரு பரிசோதனையால் குற்றவாளியாகாத தென் மாகாண கூட்டுறவு சங்கமொன்றின் அல்லது அமைப்பொன்றின் தலைவரொருவர்;

(எ) 20 வருடங்களுக்கு குறைவடையா சேவை தேர்ச்சியுடனான சேவையில் ஈடுபட்டுள்ள அல்லது ஓய்வு பெற்றிருக்கும் அல்லது சட்டபூர்வமான ஒரு பரிசோதனையால் குற்றவாளியாகாத தென் மாகாண கூட்டுறவுச் சங்கமொன்றின் அல்லது அமைப்பொன்றின் பணியாளரொருவர்;

நியமிக்கப்படுதல் வேண்டும்.

*(v)* ஆலோசனை சபைத் தீர்மானத்தின் பிரகாரம் தென் மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கும் உத்தியோகத்தர்களிடம் இருந்து மாத்திரம், திட்டத்தினை செயற்படுத்தல் பொருட்டு தேவையான பதவியணியினை உபயோகித்திட முடியும். சேவையணி

4. *(i)* (அ) இந் நியதிச் சட்டத்தில் 3*(iv)* ஆம் கூற்றில் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) எனும் கூற்றுகளில் குறிப்பிடப்படும் ஆலோசனை நிருவாக சபை அங்கத்தவர்களின் பதவிக் காலம், அவ் உத்தியோகபூர்வ பதவிதாங்கும் காலப் பகுதிக்கு வரையறைப்பட்டதாகும். ஆலோசனை நிருவாக சபை அங்கத்தவர்களின் தகைமைகள் மற்றும் பதவிக் காலம்

(ஆ) இந் நியதிச் சட்டத்தின் 3*(iv)* ஆம் கூற்றில் (இ) கூற்றின் கீழ் நியமிக்கப்படும் ஆலோசனை நிருவாக சபை அங்கத்துவ உறுப்பினர் தொழிலாளர் ஆணையாளர் நாயகம் ஆகின்ற போது அவர்களின் பதவிக் காலம் உத்தியோகபூர்வ பதவி தாங்கும் காலத்திற்கு வரையறையானதாகும். தொழிலாளர் ஆணையாளர் நாயகத்தால் பெயரிடப்படும் அத் திணைக்களத்தின் நிறைவேற்று உத்தியோகத்த ரொருவர் ஆலோசனை நிருவாகச் சபையின் அங்கத்தவரொருவராக நியமிக்கப்படுவதாயின் அவரது பதவிக் காலம் மரணமடைவதால் அல்லது இராஜினாமா செய்வதால் பதவி வெற்றிடமானால் தவிர 03 வருட காலப் பகுதிக்காக இருத்தல் வேண்டும். அவ்வாறாயினும், தொழிலாளர் ஆணையாளர் நாயகத்தால் பிறிதொரு உத்தியோகத்தரை பெயர் குறிப்பதால், முதலாவதாக நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தரின் நியமனம் முடிவடைந்திடும்.

(இ) இந் நியதிச் சட்டத்தின் 3*(iv)* ஆம் கூற்றில் (ஊ), (ஒ) எனும் கூற்றுகளின் கீழ் ஆலோசனை நிருவாக சபைக்கு நியமிக்கப்பட்டுள்ள அங்கத்தவரொருவர், மரணமடைவதாலோ அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது அமைப்பிடம் முன்வைக்கப்படும் கடிதம்மூலம் இராஜினாமா செய்யப்பட்டால் தவிர 03 வருட காலப் பகுதிக்காக பதவி தாங்குதல் வேண்டும்.

*(ii)* ஆலோசனை நிருவாக சபைக்கு இந் நியதிச் சட்டத்தில் 3*(iv)* ஆம் கூற்றில் (ஊ) மற்றும் (ஒ) கூற்றுகளின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள ஒரு அங்கத்தவர் மேலே குறிப்பிடப்பட்டுள்ள விதமாக பதவியினை வெற்றிட மாக்கப்பட்ட சந்தர்ப்பமொன்றின் போது 03.(iii) உப கூற்றின் ஏற்பாடுகள் தொடர்பாக கவனம்செலுத்தப்பட்டு அவருக்குப் பதிலாக பிறிதொரு நபரை நியமித்திட வேண்டியதோடு அவ் அங்கத்தவர் தம்மை நியமித்தல் தொடர்பாக காரணமாகிய நபரது எஞ்சியிருக்கும் பதவிக் காலம் தொடர்பாக பதவியினை தாங்குதல் வேண்டும்.

*(iii)* நோய்வாய்ப்படுதல் அல்லது இலங்கையில் இருந்து வெளியேறி இருத்தல் அல்லது வேறு ஏதேனுமொரு காரணமாக ஆலோசனை நிருவாக சபைக்கு நியமிக்கப்பட்ட அங்கத்தவரொருவருக்கு தமது வேலைகள் நிறைவேற்றிட இயலாதென அறியப்பட்டால் அவருக்கு பதிலாக வேலைகள் ஆரணிக்கப்படும் நபர், பதில் வேலை புரிதல் தொடர்பாக அமைச்சரால் நியமித்தல் முடியும்.

*(iv)* பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ள அங்கத்தவரொருவரை தவிர பதவியில் வெற்றிடம்ஏற்படுத்துகின்ற ஆலோசனை நிர்வாக சபையின் யாரேனுமொரு அங்கத்தவர் மீள நியமித்திட பொருத்தமாகின்றனர்.

(v) ஆலோசனை நிருவாக சபைக்கு இந் நியதிச் சட்டத்தில் 3 (iv) ஆம் கூற்றில் தீ கூற்றின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினரொருவர் தொடர்ந்து ஆலோசனை நிருவாக சபையின் மூன்று கூட்ட அமர்வுகளுக்கு பங்கேற்கா விடின், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரால், அவருக்குப் பதிலாக அக் கூற்றின் கீழ் பிறிதொரு நபர் நியமிக்கப்பட வேண்டியதோடு அவ் அங்கத்தவர் தாம் நியமிக்கப்படுவதற்கு காரணமான நபரின் எஞ்சியிருக்கும் பதவிக் காலத்திற்கு பதவி தாங்குதல் வேண்டும்.

(vi) ஆலோசனை நிருவாக சபைக்கு இந் நியதிச் சட்டத்தில் 3 (iv) ஆம் கூற்றில் தீ மற்றும் (ஒ) கூற்றுகளின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள அங்கத்தவரொருவர் தொடர்ந்து ஆலோசனை நிருவாக சபையின் மூன்று கூட்ட அமர்வுகளுக்கு பங்கேற்காவிடின், ஆலோசனை நிருவாக சபையினால் அது தொடர்பாக அமைச்சரிடம் அறிக்கையிடல் வேண்டும்.

ஆலோசனை நிருவாக சபையின் வேலைகள்

5. ஆலோசனை நிருவாக சபையினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்கள் அல்லது அவற்றில் இருந்து எவற்றையாவது செயற்படுத்திட முடியும்.

(i) இத் திட்டம் செயற்படுத்தல் பொருட்டு கொள்கைகள் ஒழுங்கமைத்தல்.

(ii) இத் திட்டம் முகாமைத்துவப்படுத்துவதற்கு, கையாளுவதற்கு மற்றும் நடைமுறைப்படுத்துவதில் தொடர்பு பட்ட காரணங்கள் தொடர்பாக பணிப்பாளரிடம் ஆலோசனைகள் வழங்கல்.

(iii) இத் திட்டத்தின் அலுவல்கள் மீளாய்வு செய்தல்.

ஆலோசனை நிருவாக சபைக் கூட்டங்கள்

6. (i) கூட்டுறவு விடயப் பொறுப்பு அமைச்சுச் செயலாளர், ஆலோசனை நிர்வாக சபையின் தலைவராவர். இவர் சகல கூட்டங்களினதும் தலைமை தாங்கல் வேண்டும்.

(ii) பணிப்பாளர், ஆலோசனை நிருவாக சபையின் செயலாளராவர். இவர் ஆலோசனை நிருவாக சபையின் கூட்டங்கள் அழைத்திட வேண்டியதோடு அக் கூட்டங்கள் இந் நியதிச் சட்டத்தின் கீழ், திட்டத்தின் அலுவல்கள் தொடர்பாக அவசியமாகக்கூடிய விதமாக நடாத்துதல் வேண்டும்.

வெற்றிடம்/ வெற்றிடங்கள்

(iii) ஆலோசனை நிர்வாக சபையில் வெற்றிடம்/வெற்றிடங்கள் நிலவுகின்ற ஒரு சந்தர்ப்பத்தில் மேற்கூறிய ஆலோசனை நிர்வாக சபையினால் எடுக்கப்படும் தீர்மானங்கள் யாவும் முன்கூறிய வெற்றிடம் காரணமாக காலியாவதில்லை.

நிறைவெண்

(iv) ஆலோசனை நிருவாக சபைக் கூட்டமொன்றின் நிறைவெண், நான்கு அங்கத்தவர்களாக இருந்தல் வேண்டும்.

ஆலோசனை நிர்வாக சபை ஊதியம்

7. ஆலோசனை நிருவாக சபைக் கூட்டங்களில் பங்கேற்றல் பொருட்டு, ஆலோசனை நிருவாக சபை அங்கத்தவர்களுக்கு, தென் மாகாண சபை நிதி அமைச்சின் இணக்கப்பாட்டுடன், கூட்டுறவு விடயப் பொறுப்பு அமைச்சர் தீர்மானிக்கப்படும் கட்டணமொன்று செலுத்தப்படுதல் முடியும்.

**2 ஆம் பிரிவு**

**கூட்டுறவு ஓய்வூதியச் சம்பளத் திட்டம் செயற்படுத்துதல்.**

திட்டத்தில் சேர்வதற்கான தகைமைகள்

8. இந் நியதிச் சட்டம் செயற்படுத்திய திகதிக்கு முன் சேவையில் சேர்ந்து இது வரை சேவையில் ஈடுபட்டிருக்கும், வயதால் 18 வருடங்களுக்கு குறையாத மற்றும் 60 வயது வரையான நிரந்தரமான நியமனமொன்றைப் பெற்று கூட்டுறவு சேவையாளரொருவருக்கு இத் திட்டத்தில் சேர்வதற்கு உரிமையுள்ளது.

திட்டத்தில் கட்டாயமாகவே பங்களித்தல் வேண்டும் என்பவை.

9. இந் நியதிச் சட்டம் செயற்படுத்திய திகதி முதல் நிரந்தர சேவையில் சேர்கின்ற கூட்டுறவுச் சங்க சேவையாளர்கள் இவ் ஓய்வூதிய சம்பளத் திட்டத்திற்கு கட்டாயமாகவே பங்களித்தல் வேண்டும்.

10. (*i*) இத் திட்டத்தில் சேர்கின்ற (இங்கு இதன் பின்னர் பங்களித்தல் என குறிப்பிடப்படும்) கூட்டுறவுச் சங்க சேவையாளரொருவர் கட்டளைகள் மூலம் விதிக்கப்படும் நிலைமைக்கேற்ப இத் திட்டத்தின் கீழ் மேல் வரும் விளைவுகள் தொடர்பாக உரிமை பெறல் வேண்டும். திட்டத்தின் கீழான விளைவுகள்

(அ) விதிக்கக்கூடிய விதமாக காலப் பகுதிக்கு ஏற்றபடியாக ஓய்வூதியச் சம்பளம்.

(ஆ) விதிக்கக்கூடிய விதமாக காலப் பகுதிக்கு ஏற்றபடியாக இதன் பின்னர் மிகையூதியம் என குறிப்பிடப் படும் மரணவூதியமொன்று.

(*ii*) பங்களிப்புக் காலஎல்லை, பங்களிப்பாளரின் வயது மற்றும் பங்களிப்பாளரால் செலுத்தப்பட்டுள்ள மொத்தப் பணத் தொகையினை கவனத்தில் கொண்டு ஓய்வூதியச் சம்பளம் அல்லது மரணவூதியம் செலுத்தும் விதம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

11. (*i*) பங்களிப்பாளர் தமது வயது 60 வருடங்களாகியபோது ஓய்வூதியச் சம்பளத்திற்கு உரிமை பெறுதல் வேண்டும். அவ்வாறாயினும், தமது சந்தாப் பணம் செலுத்தல் ஆரம்பிக்கப்பட்ட பங்களிப்பாளரொருவர் விதிக்கப்படும் அவரது மொத்த சந்தாப் பணத் தொகையினை செலுத்தப்பட்டு பூரணமடைந்து இருப்பினும் ஓய்வூதியச் சம்பளம் பெறுவதற்கு உரிமை பெறுவது, திட்டம் அனுமதிக்கப்பட்டு 01 வருட காலம் சென்றதன் பின்னரேயாகும். ஓய்வூதியச் சம்பளம் செலுத்த வேண்டிய சந்தர்ப்பங்கள்

(*ii*) பங்களிப்பாளர் எந்தவொரு திகதியில் மரணமடைந்த போதிலும் அம் மாதம் இறுதி வரை ஓய்வூதியச் சம்பளம் செலுத்தப்படுதல் வேண்டும்.

12. தமது ஓய்வூதியச் சம்பளம் பெறுவதற்கு முன்னரான ஒரு திகதியின் போது பங்களிப்பாளரொருவர் மரணமடைந்தபோது கட்டளைகளால் விதிக்கப்படுகின்ற அடித்தாளத்தின் மீது வாழ்ந்து வருகின்ற அண்டி வாழ்வோருக்கு தீர்மானிக்கப்படும் மரணவூதியம் செலுத்தல் வேண்டும். மரணவூதியம்

13. (*i*) தமது ஓய்வூதியச் சம்பளம் பெறுதல் பொருட்டு உரிமையடைந்திட முன்னராக பங்களிப்பாளரொருவர் தமது பணிகொள்பவரான கூட்டுறவுச் சங்கத்திற்கு அல்லது அமைப்பிற்கு நிதி ரீதியான இழப்பு அல்லது கேடு ஏற்படுத்தி இருப்பதாக சட்டபூர்வமான ஒரு பரிசோதனையால் ஊர்சிதமாகி இருப்பின், இந் நியதிச் சட்டத்தின் கீழ் எந்த விதமான விளைவு உரிமைக்கும், ஓய்வூதிய சம்பளத்திற்கு உரிமை பெற முடியாது. அவ்வாறாயினும், சங்கத்திற்கு அல்லது அமைப்பிற்கு ஏற்படுத்திய நிதி இழப்பு அல்லது கேட்டை மீள நிரப்பப்பட்டு திட்டத்தில் தங்கியிருப்பதற்கு, விதிக்கப்படும் கட்டளைகளின் பிரகாரம் மற்றும் 14 ஆவது கூற்றின் ஏற்பாடுகளுக்கேற்ப பங்களிப்பாளருக்கு உரிமைகள் இருத்தல் வேண்டும். மரணவூதியச் சம்பளத்திற்கு உரிமை கிடைக்காமை

(*ii*) (அ) யாரேனுமொரு பங்களிப்பாளர் சேவையில் இருந்து ஓய்வு பெறுகின்ற போது தமது பணிகொள்பவரான கூட்டுறவுச் சங்கத்திற்கு அல்லது அமைப்பிற்கு நிதி ரீதியான இழப்பு அல்லது கேடு ஏற்படுத்தி, அவருக்கு எதிராக ஒரு சட்டபூர்வமான பரிசோதனை இறுதியடைகின்ற வரை நியதிச் சட்டத்தின் கீழ் அப்பங்கேற்பாளருக்கு செலுத்தக்கூடிய ஏதேனுமொரு ஓய்வூதியச் சம்பளம் இருப்பின் அதனை தற்காலிகமாக தடுத்து நிறுத்தும் அதிகாரம் பணிப்பாளருக்கு இருக்கின்றது.

(ஆ) 13 (*ii*) (அ) இன் கீழ் பங்கேற்பாளருக்கு எதிராக நடாத்தப்படும் சட்டபூர்வமான ஒரு பரிசோதனை 03 மாத காலத்தை விட தாமதமானால் ஆலோசனை நிருவாக சபையின் அங்கீகாரத்துடன் ஓய்வூதிய சம்பளத்தின் அரையோ அல்லது அதற்கு குறைந்த அளவு பரிசோதனைக்கு எவ்விதமான கேடு விளைவிக்கப்படாத விதமாக பங்கேற்பாளரிடம் செலுத்தல் முடியும்.

(இ) மேலே குறிப்பிடப்பட்ட பங்கேற்பாளர் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற சட்டபூர்வமான பரிசோதனையின்போது பங்கேற்பாளர் விடுதலை பெற்றால் ஓய்வு பெற்ற திகதியில் இருந்து செயற்படும் விதமாக ஓய்வூதிய சம்பளம் பெறுவதற்கும் பங்கேற்பாளர் உரிமை பெறுதல் வேண்டும்.

14. (*i*) யாரேனுமொரு கூட்டுறவு சேவையாளர் திட்டத்தின் ஒரு பங்கேற்பாளராக சேர்த்திடப்பட்ட போது பணிப்பாளரால் பங்கேற்பாளரிடம் சான்றிதழொன்று பிறப்பிக்கப்பட வேண்டியதோடு அதில் பங்கேற்பாளரால், ஒவ்வொரு பங்கேற்பாளரிடம் பணிப்பாளரால் சான்றிதழொன்று பிறப்பிக்க வேண்டும் என்பவை.

(அ) செலுத்தப்பட வேண்டிய சந்தாப் பணம்;

(ஆ) கூட்டுறவுச் சங்கம் அல்லது அமைப்பினால் செலுத்தப்பட வேண்டிய சந்தாப் பணம்;

(இ) சான்றிதழின் நியமங்கள் மற்றும் நிபந்தனைகள்;

(ஈ) பங்கேற்பாளரிடம் வழங்கப்படும் சான்றிதழின் கீழ் பங்கேற்பாளர் அடைகின்ற விளைவுகள்;

குறிப்பிடல் வேண்டும்.

(ii) பங்கேற்பாளரொருவரால் அவ்வப்போது அல்லது தொடர்ந்து ஏதேனுமொரு திகதியின்போது மூன்று தவணையாக சந்தாப்பணம் செலுத்தல் தவறியிருக்கும்போது அவரிடம் வழங்கப்பட்டுள்ள சான்றிதழ் உள்ளடங்கும் விளைவுகள் உரிமையற்றுப் போதல் வேண்டும்.

(iii) யாரேனுமொரு பங்கேற்பாளரிடம் வழங்கப்பட்டிருக்கும் சான்றிதழின் கீழ் விளைவுகள் யாரேனுமொரு பங்கேற்பாளருக்கு உரிமையற்றுப் போகக்கூடிய ஒரு சந்தர்ப்பத்தின் போது அவற்றிற்கான ஒரு அறிவித்தல் பணிப்பாளரால் பங்கேற்பாளரிடம் பிறப்பிக்கப்படுதல் வேண்டும்.

(iv) தமது சான்றிதழை செல்லுபடியானதாக அமைத்துக்கொள்ளல் பொருட்டு பணிப்பாளரிடம் மேன் முறையீடு செய்யக்கூடிய உரிமை கட்டளைகளின் பிரகாரம், விதிக்கப்படும் விதிமுறைக்கேற்ப ஒரு பங்கேற்பாளருக்கு இருக்க வேண்டியதோடு தவணைகள் செலுத்திட இயலாமற் போனதன் காரணங்கள் பங்கேற்பாளருக்குகட்டுப்படுத்திட இயலாமற் போகின்றபோது, அந் நிலை தொடர்பாக பணிப்பாளர் திருப்தி அடைவதாயின் பணிப்பாளரால் சான்றிதழை இரத்துச் செய்ததாகக் கருதலாம்.

(v) சான்றிதழொன்றை செல்லுபடியாக்குவதில் பணிப்பாளர் தீர்மானிக்கின்ற சந்தர்ப்பத்தின்போது தவணைக் கட்டணம் செலுத்தப்பட வேண்டியது ஏதேனுமொரு திகதிக்கு முன்னரோ அத் திகதியை பங்கேற்பாளரிடம் அறிவித்தல் வேண்டும். அத்திகதிக்கு முன்னர் சந்தாப் பணம் செலுத்திட இயலாமற் போகின்றதென்றால் அவரது சான்றிதழ் இரத்துச் செய்யப்பட்டதாக கருத முடியும்.

சந்தாப் பணம்

15. (i) கட்டளைகளால் விதிக்கப்படுகின்ற குறித்தொதுக்கல்களால் இத் திட்டத்தின் சந்தாப்பணம், பங்கேற்பாளர் மற்றும் தொடர்புபட்ட கூட்டுறவுச் சங்கம் அல்லது அமைப்பினால் செலுத்தப்படுதல் வேண்டும். கூட்டுறவுச் சங்கமொன்றில் அல்லது அமைப்பொன்றில் சேவையில் ஈடுபட்டிருக்கும் இத்திட்டத்தின் பங்கேற்பாளர்களால் செலுத்தப்படுகின்ற சந்தாப் பணம் சங்கம் அல்லது அமைப்பினால் திட்ட முறைமையிடம் அனுப்புதல் வேண்டும். அக் கட்டளைகளின் கீழ், சந்தாப் பணம் செலுத்தப்பட வேண்டியது ஏதேனுமொரு திகதிக்கு முன்னரோ, அத் திகதிகளை குறிப்பாக காட்டப்பட்டிருத்தல் வேண்டியதோடு கூட்டுறவுச் சங்கம் அல்லது அமைப்பு சந்தாப் பணம் செலுத்தல், மேற்கூறிய குறிப்பான திகதியில் செலுத்தப்படா தெனில் கட்டளைகளின் பிரகாரம் விதிக்கப்படுகின்ற தண்டப் பணத்திற்கு கட்டுப்படுதல் வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது சங்கம் நீக்கிடப்படுதல் அல்லது ஒன்றிணைத்தல் காரணமாக ஓய்வூதியச் சம்பளம் உரிமையற்றுப் போகக்கூடாது என்பன.

16. (i) ஏதேனுமொரு கூட்டுறவுச் சங்கம் அல்லது அமைப்பு சட்டத்தின் பிரகாரம் ஒழிவு செய்தல் தொடர்பாக பதிவை இரத்துச் செய்திருக்கும்போது, சங்கம் அல்லது அமைப்பு பதிவை இரத்துச் செய்யும் திகதி குறிக்கப்பட்டு, பங்கேற்பாளர் பணம் செலுத்தப்பட்டிருப்பின் கட்டளைகளின் பிரகாரம் விதிக்கப்படும் விதமாக ஓய்வூதிய சம்பளம் செலுத்தல் வேண்டும்.

(ii) ஏதேனுமொரு கூட்டுறவுச் சங்கம் அல்லது அமைப்பு சட்டத்தின் பிரகாரம் ஏதேனுமொரு கூட்டுறவுச் சங்கம் அல்லது அமைப்பு ஒன்றிணைவதாயின் மற்றும் ஏதேனுமொரு கூட்டுறவுச் சங்கம் அல்லது அமைப்பு சட்டத்திற்கேற்ப ஏதேனும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அல்லது அமைப்புகளுக்கு பிரிவதாயின், பங்கேற்பாளருக்கு இத் திட்டத்தின் ஓய்வூதிய சம்பளத்திற்கான உரிமை, உரிமையற்றுப் போவதாக கருதக் கூடாததோடு புதிய சேவை உத்தேசிக்கப்பட்ட சங்கம் அல்லது அமைப்பினால் திட்டத்தின் பங்கேற்பாளர் தங்கியிருப்பதாக கருதுதல் வேண்டும்.

17. கட்டளைகளால் விதிக்கப்படுகின்ற கட்டளைகளுக்கேற்ப யாரேனுமொரு பங்கேற்பாளருக்கு திட்ட முறைமையின் கீழ் விளைவுகள் வழங்கல் பணிப்பாளரால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். வழங்கல் பணிப்பாளரால் தீர்மானித்திட வேண்டும் என்பது.

18. (i) பணிப்பாளரின் தீர்மானம் தொடர்பாக திருப்தியடையாத யாரேனுமொரு பங்கேற்பாளருக்கு கூட்டுறவு சேவையாளர் ஆணை சபையிடம் மேன்முறையீடு செய்திடமுடியும். மேன் முறையீடு அதிகாரம்.

(ii) பணிப்பாளரின் ஒரு தீர்மானம் தொடர்பாக திருப்தியடையாத யாரேனுமொரு பங்களிப்பாளருக்கு பணிப்பாளரின் தீர்மானம் கிடைத்து 30 நாட்களுக்குள் தமது மேன் முறையீட்டுக்கு ஏதுகள் குறிப்பிடப்படும் கூட்டுறவு சேவையாளர் ஆணை சபையிடம் ஒரு மேன் முறையீடு முன் வைத்திட முடியும். 30 நாட்களினுள் மேன் முறையீடு செய்திட வேண்டும் என்பது.

(iii) மேன் முறையீடு தொடர்பாக கூட்டுறவு சேவையாளர் ஆணை சபையின் தீர்மானம் 90 நாட்களினுள் மேன் முறையீட்டாளரிடம் அறிவித்தல் வேண்டும். 90 நாட்களினுள் மேன் முறையீடு தீர்மானம் பெற்றுக் கொடுத்தல் வேண்டும் என்பது.

(iv) அத்தகையவொரு மேன் முறையீடு தொடர்பாக கூட்டுறவுச் சேவையாளர் ஆணை சபையின் தீர்மானம் இறுதியானதும் வினைப்படுத்துவதாகவும் அமைதல் வேண்டும்.

19. திட்டத்தில் இருந்து செலுத்தக்கூடிய எந்தவொரு ஓய்வூதிய சம்பளம், மிகையூதியம் அல்லது கொடுப்பனவொன்று குறித்தொதுக்குதல், பராதீனப்படுத்துதல் செய்திடக் கூடாததோடு அனைத்து குறித்தொதுக்கும் அல்லது பராதீனப்படுத்தலும் பரிபூரணமாகவே வெறிதான, செல்லுபடியாகாத மற்றும் அதிகார மற்றதாகின்றது. இந் நியதிச் சட்டத்தின் கீழ் அல்லது இந் நியதிச் சட்டத்தின் கீழ் விதிக்கப்படுகின்ற கட்டளைகளின் கீழ் அல்லது பணிப்பாளரிடம் வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களின் கீழ், தவிர பிரிதொரு தரப்பினருக்கு ஓய்வூதியச் சம்பளம் அல்லது மிகையூதியம் அல்லது கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டிய நபரிடமிருந்து பெற வேண்டிய ஏதாவதொரு கடன் அல்லது கட்டணம் தொடர்பாக அத்தகைய ஓய்வூதியச் சம்பளம் அல்லது மிகையூதியம் அல்லது கொடுப்பனவு தொடர்பாக தடை விதித்தல் அல்லது ரீட் ஆணை செயற்படுத்துதல் மூலம் அறவிடல் செய்தல், செய்திடக்கூடாது. ஓய்வூதியச் சம்பளம் கொடுப்பனவு, மிகை ஊதியம் கையளித்தல் அல்லது அதில் இருந்து அறவிட்டுக் கொள்ளல் செய்யக் கூடாதென்பது.

### 3 ஆம் பிரிவு

### கூட்டுறவுச் சேவையாளர் ஓய்வூதியச் சம்பள நிதியம்

20. (i) இங்கு இதன் பின்னர் நிதியம் எனக் குறிப்பிடப்படும் கூட்டுறவு சேவையாளர் ஓய்வூதிய சம்பள நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். கூட்டுறவுச் சேவையாளர் ஓய்வூதியச் சம்பள நிதியம்.

(ii) அந்நிதியத்திடம்,

(அ) திட்டத்தினை வழிநடாத்துதல் பொருட்டு தென் மாகாண மாகாண சபையினால் காலத்திற்குக் காலம் அனுமதிக்கப் படுகின்ற நிதிப் பரிமாணங்கள்;

(ஆ) நிதி விடயப் பொறுப்புடைய மாகாண அமைச்சரால் காலத்திற்குக் காலம் பணிப்பாளரிடம் முற்பணம் என்றபடியாக வழங்கப்படக்கூடிய நிதிப் பரிமாணங்கள்;

(இ) கூட்டுறவு நிதியத்தால் அனுப்பப்படுகின்ற நிதிகள்;

(ஈ) ஏதேனுமொரு கூட்டுறவுச் சங்கத்தால் அல்லது அமைப்பால் வருடாவருடம் அல்லது காலத்திற்குக் காலம் வழங்கப்படுகின்ற நிதிப் பரிமாணங்கள்.

(உ) இந் நியதிச் சட்டத்தின் கீழ் தமது அதிகாரங்கள் செயற்படுத்துதல் பொருட்டு காரியங்கள் நிறைவேற்றிடும்போது மற்றும் பணிகள் மேற்கொள்கின்றபோது பெறக் கூடிய அனைத்து நிதிப் பரிமாணங்கள்;

(ஊ) பரிசில்கள் மற்றும் நன்கொடைகள் வழியால் ஏதேனுமொரு மூலத்தால் கிடைக்கும் அனைத்து நிதிப் பரிமாணங்கள்;

(எ) திட்ட முறையின் பங்கேற்பாளர்களால் சந்தாப் பணம் என்றபடியாக திட்டத்திடம் செலுத்தப்படுகின்ற சகல நிதிப் பரிமாணங்கள்;

(ஏ) முதலீடுகளால் வட்டி அல்லது இலாபம் என்றபடியாக உழைத்திடப்பட்டுள்ள அனைத்து நிதிப் பரிமாணங்கள்;

(ஒ) நிதியத்திடம் பரிசில்கள் மற்றும் நன்கொடைகள் ஏற்றப்படியாக ஏதேனுமொரு மூலத்தில் இருந்து கிடைத்திடக்கூடிய அனைத்து நிதிகள் மற்றும் இத்திட்டத்தின் பணிகள் மேற்கொள்ளும்போது, பணிப்பாளரிடம் கூட்டுறவுச் சங்கங்களால் மற்றும் அமைப்புகளால் முற்பணம் என்றபடியாக வழங்கப்படக்கூடிய நிதிப்பரிமாணங்கள் அனுப்பிட முடியும்.

(iii) இந் நிதியத்தின் அலுவல்கள் நடைமுறைப்படுத்தல் பொருட்டு ஒரு அரச வங்கியில் நடைமுறைக் கணக்கொன்று நடாத்திச் செல்லல் வேண்டும்.

(iv) இந் நியதிச் சட்டத்தின் கீழ் ஆலோசனை நிருவாக சபையின் மற்றும் பணிப்பாளரின் அதிகாரங்கள் செயற்படுத்தும்போது, காரியங்கள் நிறைவேற்றும்போது, மற்றும் பணிகள் மேற்கொள்கின்றபோது ஆலோசனை நிருவாக சபையினால் அல்லது பணிப்பாளரால் செய்யப்பட்டுள்ள ஏதேனுமொரு செலவீனத்தை தீர்த்தல் பொருட்டு தேவைப்படும் அனைத்து நிதிப் பரிமாணங்களும் இந் நிதிச் சட்டத்தின் மூலம் அல்லது கட்டளைகளின் கீழ் நிதியத்தில் இருந்து செலுத்தப்பட வேண்டிய நிதிப் பரிமாணங்களும், நிதியத்தால் செலுத்தப்படுதல் வேண்டும்.

நிதி முதலீடு செய்தல்.

21. இந் நியதிச் சட்டத்தின் கீழ் பணிப்பாளருக்கு உடனடியாக தேவைப்படாத நிதியத்தின் அனைத்து நிதிகள், ஆலோசனை நிருவாக சபையின் தீர்மானத்தின் பிரகாரம் பணிப்பாளரால் ஒரு அரச வங்கியில் அல்லது அரச நிதி நிறுவனமொன்றில் முதலீடு செய்தல் வேண்டும்.

நிதி கடனுக்கு எடுப்பதற்கான அதிகாரம்.

22. பணிப்பாளரால் ஆலோசனை நிருவாகச் சபையின் தீர்மானத்துடன் பணிப்பாளரின் பொறுப்புகள் நிறைவேற்றல் பொருட்டு இல்லையெனில், இந் நியதிச் சட்டத்தின் கீழ் திட்டத்தினை செயற்படுத்துதல் தொடர்பாக பணிப்பாளருக்கு தேவைப்படும் நிதிகள், கூட்டுறவு நிதியத்தில் இருந்து கடனுக்கு எடுப்பதை செய்திட முடியும்.

நிதியாண்டு.

23. (i) திட்டத்தின் நிதியாண்டு, கலண்டர் நிதியாண்டு வருடமாக இருத்தல் வேண்டும்.

கணக்குகள் தயாரித்தல்.

(ii) வரவேற்றிடப்படும் கணக்குக் கோட்பாடுகள், கொள்கைகள் மற்றும் நியமங்களுக்கு அனுகூலமான முறையில் கணக்கு வைப்பதற்கு பணிப்பாளர் கவனம் கொள்ளல் வேண்டும். பணிப்பாளரால் அவ்வேலை, தென் மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள கணக்காளரைக் கொண்டு நிறைவேற்றிக் கொள்ளல் வேண்டும்.

(iii) பணிப்பாளரால் இத் திட்டத்தின் பணிகள் செயற்படுத்தல் தொடர்பாக வருடாந்த செலவீன மதிப்பீடொன்று ஏற்பாடு செய்து, ஆலோசனை நிருவாகியிடம் முன் வைத்து அனுமதி பெறல் வேண்டும்.

(iv) ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் மும்மாத வரவு செலவு தொடர்பான அறிக்கை ஏற்பாடு செய்திட வேண்டியதோடு அவ் அறிக்கை காலாண்டு இறுதி அடைந்து 30 நாட்களினுள் ஆலோசனை நிருவாக சபையிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(v) பணிப்பாளரால் ஒவ்வொரு வருடத்திலும் திசெம்பர் 31 ஆந் திகதியில் இருந்தபடியாக திட்டத்தின் பதிவேடு கணக்குகள் சமப்படுத்தல் தொடர்பாக ஏற்பாடு செய்திட வேண்டியதோடு அத் திகதிக்கு வரவு செலவு கணக்கு மற்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் பொழிப்பைக்கொண்ட ஒரு ஐந்தொகை, எதிர் வரும் வருடத்தில் மாச்சு மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் ஆலோசனை நிருவாக சபையிடம் முன்வைத்தல் வேண்டும். மாகாண சபையிடம் கணக்குகள் முன்வைத்தல் வேண்டும் என்பவை.

(vi) 23 (எ) அத்தியாயத்தில் உள்ளடங்கும் தகவல்கள் அவ் வருடத்தில் யூன் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் மாகாண சபையிடம் முன்வைத்தல் வேண்டும்.

(vii) ஒவ்வொரு வருடத்திலும் திட்டத்தின் கணக்குகள் மாகாண சபையில் கணக்காய்வுப் பொறுப்பு உத்தியோகத்தரால் அல்லது சட்டத்திற்கேற்ப தகைமை கணக்காய்வாளர் அதிகாரியினால் கணக்காய்விடல் வேண்டும். கணக்குகள் கணக்காய்விடல்.

### 4 ஆம் பிரிவு

### ஏனைய காரணங்கள்

24. (i) சில சமயங்களில் விதிக்கப்படும் என அல்லது விதிக்கப்பட வேண்டும் என இந் நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்கள் மற்றும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள காரணங்கள் தொடர்பாக அமைச்சரால் கட்டளைகள் தயாரித்திட முடியும். கட்டளைகள் தயாரித்தல்.

(அ) திட்டத்தினை ஒழுங்குபடுத்துதல், நிருவகித்தல் மற்றும் முகாமைத்துவம்.

(ஆ) கூட்டுறவுச் சேவையாளரொருவர் திட்டத்தில் சேர்வதற்கு உரிமை பெறுவது எவ்வித தகைமைகள் மற்றும் சந்தர்ப்பத்திற்கேற்ற காரணங்களுடன் மற்றும் எவ்வித வரையறுத்தல்களின் கீழ் என்பதை தீர்மானித்தல்.

(இ) பங்கேற்பாளர்களால் மற்றும் பங்கேற்பாளர்களுக்காக கூட்டுறவுச் சங்கங்கள், அமைப்புகளால் செலுத்தப்பட வேண்டிய சந்தாப்பண தொகையினை தீர்மானித்தல்.

(ஈ) பங்கேற்பாளரிடம் ஓய்வூதிய சம்பளம், மிகையூதியம் அல்லது கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டிய அடித்தளத்தினை தீர்மானித்தல்.

(உ) சந்தாப் பணம் செலுத்துவதை தவறவிடல் தொடர்பான நிபந்தனைகளைத் தீர்மானித்தல்.

(ஊ) ஆலோசனை நிருவாகச் சபையின் அலுவல்கள் தொடர்பாக வேலை படிமுறை மற்றும் விதிகள் ஒழுங்கமைத்தல்.

(எ) மேன் முறையீடு செயற்பாடு தொடர்பான காரிய மற்றும் விதிகள் ஒழுங்கமைத்தல்.

(ஏ) ஓய்வூதியச் சம்பள உரிமை சான்றிதழ் இறுதி செய்தல் அல்லது உரிமையற்றதாக்கல்.

(ஐ) மரண மிகையூதியம் செலுத்தும் அடித்தளம் மற்றும் அளவினை தீர்மானித்தல்.

(ஒ) தொடர்புபட்ட மாதிரிகளை விதித்தல்.

(ii) அமைச்சரால் தயாரிக்கப்படுகின்ற சகல கட்டளைகளும் வர்த்தமானியில் பிரசுரித்தல் வேண்டும். அவ்வாறாக பிரசுரிக்கப்படும் திகதியில் அல்லது கட்டளைகளில் குறிப்பிடப்படும் பின் திகதி முதல் அது செயற்படுதல் வேண்டும்.

(iii) அத்தகைய சகல கட்டளைகளும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் கூடிய விரைவில் அனுமதிக்காக மாகாண சபையிடம் முன்வைத்தல் வேண்டும். அவ்வாறாக அனுமதிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு கட்டளை வர்த்தமானியில் பிரசுரித்தல் வேண்டும். அவ்வாறாக அனுமதிக்கப்படாத ஏதேனுமொரு கட்டளை, அக் கட்டளையின் கீழ் முன்கூட்டி செய்யப்பட்டுள்ள எதற்கும் எவ்வித தாக்கங்களும் ஏற்படாத விதமாக, அவ் அனுமதிக்கப்பட்டுள்ள திகதி முதல் அதனை நீக்கியதாக கருதுதல் வேண்டும். ஏதேனுமொரு கட்டளை அவ்வாறாக கட்டளைக்குட்பட்டதாகக் கருதப்படும் திகதி வர்த்தமானியில் பிரசுரித்தல் வேண்டும்.

இந் நியதிச் சட்டத்தின் கீழ் அல்லது பணிப் பாளரின் ஆணையின் கீழ் எடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பான பாதுகாப்பு.

25. (i) பணிப்பாளர் அல்லது ஆலோசனை நிருவாக சபை அல்லது கூட்டுறவு சேவையாளர் ஆணை சபையினால் இந் நியதிச் சட்டத்தின் கீழ் நற்குணத்துடன் செய்யப்பட்டுள்ள ஏதேனுமொரு செயல் தொடர்பாக பணிப்பாளருக்கு அல்லது ஆலோசனை நிருவாக சபையின் அங்கத்தவரொருவருக்கு அல்லது கூட்டுறவு சேவையாளர் ஆணை சபையின் அங்கத்தவரொருவருக்கு; அல்லது

(ii) பணிப்பாளரின் அல்லது ஆலோசனை நிருவாகச் சபையின் அல்லது கூட்டுறவு சேவையாளர் ஆணை சபையின் கட்டளை அடிப்படையில் நற்குணத்துடன் செய்யப்பட்டுள்ள அல்லது அவ்வாறாக கருதப்பட்ட ஏதேனுமொரு செயல் தொடர்பாக திட்டத்தினை செயற்படுத்திட துணையாகின்ற ஒரு உத்தியோகத்தருக்கு அல்லது ஒரு சேவையாளருக்கு எதிராக எந்த விதமான சிவில் வழக்கு அல்லது குற்ற வழக்கு எதுவும் பதிவிட இயலாமல் இருத்தல் வேண்டும்.

தவறுகள் மற்றும் தண்டனைகள்.

26. இந் நியதிச் சட்டத்தில் ஏதேனுமொரு ஒழுங்கு அல்லது நியதிச்சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட ஆணையில் ஏதாவது ஒழுங்கினை மீறும் அல்லது அதன் கீழ் செயற்படுவதற்கு தவறுகின்ற அனைத்து கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது அமைப்பும் தவறுக்கு ஆளாகுவதோடு நீதிவான் ஒருவரின் முன்னிலையில் குறும் வழக்கு விசாரணையின் கீழ் தவறாளியாகியபோது 06 மாதங்களுக்கு அதிகரிக்காத காலத்திற்கு இரு முறைகளின் ஒன்றிற்கேற்ப சிறைத் தண்டனை வழங்குவதற்கோ அல்லது ரூபா பன்னிரெண்டாயிரம், தண்டனைக்கு அல்லது சிறைத் தண்டனை மற்றும் நிதித் தண்டனை எனும் இரண்டுக்கும் ஆளாகுதல் வேண்டும்.

பொருள் கோடல்.

27. சொற்கள் தொடர்பாக பிறிதொரு பொருள் தேவைப்படுவதாயின் தவிர இந் நியதிச் சட்டத்தில்,

"மாகாண சபை" என்பது, தென் மாகாண சபை எனக் கருதப்படும்.

"அமைச்சர்" என்பது, தற்காலத்தில் தென் மாகாணத்தில் கூட்டுறவு விடயப் பொறுப்பு அமைச்சராவர்.

"கூட்டுறவு சேவையாளர் ஆணை சபை" என்பது, 1998 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தென் மாகாண கூட்டுறவு சேவையாளர் ஆணையாளர் சபை நியதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட தென் மாகாணத்தின் கூட்டுறவு சேவையாளர் ஆணைச் சபை எனக் கருதப்படும்.

"கூட்டுறவுச் சங்கமொன்று" என்பது, 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க மற்றும் 1982 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டங்களால் திருத்தப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க சட்டத்தின் கீழ் தென் மாகாணத்தில் பதிவிடப்பட்ட கூட்டுறவுச் சங்கமொன்று/அமைப்பொன்று எனக் கருதப்படும்.

"கூட்டுறவு அமைப்பொன்று" என்பது, 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க மற்றும் 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க திருத்திய சட்டங்களால் திருத்தப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க சட்டத்தின் கீழ், தென் மாகாணத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள பல கூட்டுறவுச் சங்கங்களுடன் கூடிய பதிவு செய்யப்பட்டுள்ள கூட்டுறவு சங்கமொன்றாகும்.

"சேவையாளர்" என்பது, 1972 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கூட்டுறவு சேவையாளர் ஆணைச் சபை சட்டத்தில் அர்த்த முடையதாக மற்றும் 1998 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தென் மாகாண கூட்டுறவு சேவையாளர் ஆணைச் சபை நியதிச் சட்டத்தின் அர்த்தமுடைய கூட்டுறவுச் சங்கமொன்றில்/ அமைப்பொன்றில் நிரந்தரமான நியமனமொன்றை பெற்ற சேவையாளரொருவர், சேவையாளர் எனக் கருதப்படும்.

"சட்டபூர்வமான பரிசோதனை" என்பது, முறையான ஒழுக்காற்று பரிசோதனை 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க மற்றும் 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க திருத்தச் சட்டங்களால் திருத்தப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒரு பரிசோதனையாகக் கருதப்படும்.

அனுகூலமற்ற நிலை ஏற்படுதல்.

28. இந் நியதிச் சட்டத்தில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளின் வாசகங்களிடையில் ஏதேனும் மொழி அனுகூலமற்ற நிலை ஏற்பட்டால் அப்போது சிங்கள மொழி வாசகம் அதிகாரம் பெற்றதாகும்.

4 - 890

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.